DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE OF GUDALUR

| | |
|---|---|
| Calender<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No. **CC No. 43/2018** |
| Deposition of witness for | Prosecution **PW - 7**<br>Deffence<br>Court |

Name : **திரு.மணிதுரை**

Father's/Husband's Name: திரு.

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 29.04.2026

**(எதிரி ஆஜரில் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317/ 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். சாட்சியம் காணொளி வாயிலாக பதிவு செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை :**

1. நான் தற்போது கோவை மாவட்டம், கருமத்தம்பட்டி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். மேலும் அயல்

G.SARAVANAKUMAR Digitally signed by G.SARAVANAKUMAR Date: 2026.04.29 12:21:02 +0530

பணியாக கோயமுத்தூர் மாவட்ட தேர்தல் பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். நான் கடந்த 2018–ல் தேவர்சோலை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது தேவர் சோலை காவல் நிலைய குற்ற எண்.18/2018 என்ற வழக்கை பதிவு செய்து தலைமைக் காவலர் திரு.சண்முகராஜ் என்னிடம் புலன் விசாரணைக்கு சமர்ப்பித்தார்.

2. மேற்படி வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நான் 14.03.2018 ம் தேதியன்று காலை 11.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகளான காத்திக் மற்றும் சுதீஷ் ஆகியோர்களின் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆகும். அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 4 ஆகும்.**

3. அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்திலிருந்து வழக்கு சொத்துக்களான ஒன்றரை அடி நீளமுள்ள இரும்பு ராடைக் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். **அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ. 5 ஆகும்.** சாட்சிகளான பிரதீப் குமார், அவரது மனைவி தனலட்சுமி, அவரின் மகள் பிரியங்கா மற்றும் சம்பவ நடந்த வீட்டருகில் இருந்த சாட்சிகளான அஷ்ரப், வாசுதேவன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கு சொத்தை இந்நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி PR.No.28/2018 என்ற எண் பெற்றேன். **அந்த படிவம் 91 அ.சா.ஆ.6 ஆகும்.**

4. மேற்படி சாட்சிகளை விசாரணை செய்த‌தில் நடந்த சம்பவம் உண்மையென தெரிய வந்ததால் எதிரியைத் தேடிச் சென்றோம். எதிரி

G.SARAVANAKUMAR
Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.04.29 12:21:08 +0530

தலைமறைவாகிவிட்டதால் கைது செய்ய இயலவில்லை. பின்னர் 27.03.2018 ம் தேதியன்று எதிரி உதகை மாண்புமிகு மாவட்ட நீதிமன்றத்தில் முன் பிணை பெற்றதாக எங்களுக்கு தகவல் கிடைத்தது.

5. பின்பு வாதிக்கு சிகிச்சையளித்த மருத்துவர் திரு.ஹரிஹரன் என்பவரையும், தலைமைக் காவலர் திரு.சண்முகராஜ் என்பவரையும் விசாரணை செய்தேன். மேற்படி மருத்துவரை விசாரித்து விபத்து பதிவேடு மற்றும் காயக்கருத்துரை பெற்றேன். **அந்த விபத்து பதிவேடு அ.சா.ஆ.7 மற்றும் அந்த விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ள காயக்கருத்துரை அ.சா.ஆ.8 ஆகும்.** பின்பு எனது விசாரணையை முடித்து எதிரிக்கு எதிராக குற்ற அறிக்கையைத் தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. சம்பவம் 11.03.2018 அன்று நடந்தது என்றால் சரிதான். இந்த சம்பவம் குறித்து கூடலூர் அரசு மருத்துவமனையில் இருந்து எங்களுக்கு எப்போது தகவல் கிடைத்தது என்றால் சம்பவத்தினத்தன்றே கிடைத்தது. நாங்கள் மறுநாள் மருத்துவமனை சென்றோம். அப்போது பாதிக்கப்பட்ட நபர் மயக்கநிலையில் இருந்ததாலும், அவருடன் வேறு நபர்கள் யாரும் இல்லாததாலும் அன்றைய தினம் எங்களால் அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்ய இயலவில்லை. எனவே அதற்கடுத்த நாள் மருத்துவமனை சென்று அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்தோம்.

2. 13.03.2018 அன்று தான் புகார்தாரர் எங்களிடம் வாக்குமூலம்

G.SARAVANAKUMAR
Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.04.29 12:21:16 +0530

அளித்தார் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் 12.03.2018 அன்று மருத்துவமனைக்கு சென்ற போது அவருடன் இருந்த நபர்கள் புகார் அளிக்க முன்வராத காரணத்தினால் மறுநாள் மருத்துவமனை சென்று அவர் சுயநினைவுடன் இருந்த போது அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

3. இந்த வழக்கில் மாதிரி வரைபடம், பார்வை மகஜர், கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றை சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்தேன் என்று சொன்னால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் சாட்சிகளின் கையொப்பமும், உதவியாளரின் கையொப்பமும் இல்லை என்றால் சரிதான். தட்டச்சு செய்த பார்வை மகஜர் தாக்கல் செய்துள்ளோம்.

4. இந்த வழக்கின் தாக்கல் செய்யப்பட்டுள்ள கைப்பற்றுதல் மகஜர் Printed format–ல் உள்ளது என்றால் சரிதான். எதிரிக்கும், புகார்தாரருக்கும் ஏற்கனவே முன் விரோதம் இருந்ததாக புகார்தாரர் வாக்குமூலம் அளித்துள்ளார் என்றால் சரிதான். எதிரி புகார்தாரரை எங்கெல்லாம் அடித்தார் என்று எனது புலன் விசாரணையில் துலங்குமா என்றால் இடது தோள் பட்டையிலும், தலையிலும் அடித்ததாக சொல்லியுள்ளார்.

5. இந்த வழக்கில் புகார்தாரரின் மனைவியும், மகளும் கண்ணுற்ற சாட்சிகள் என்றால் சரிதான். இந்த வழக்கில் இ.த.ச.324 பிரிவின் கீழும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண

G.SARAVANAKUMAR
Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.04.29 12:21:22 +0530

காயம் என்று மருத்துவர் காயக்கருத்துரை வழங்கியுள்ளார் என்றால் சரிதான். அதன் பிறகு நான் சட்டப்பிரிவை மாற்றம் செய்தேனா என்றால் இல்லை.

6. நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எதிரி எந்த குற்ற சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்றாலும், எதிரிக்கும் புகார்தாரருக்கும் இருந்த முன்விரோதம் காரணமாக கொடுக்கப்பட்டட பொய் புகாரினை நான் முறையாக விசாரிக்காமல் எதிரிக்கு எதிராக தவறாக குற்ற இறுதி அறிக்கைத் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்காவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்திற்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in open Court read over / interpreted to the witness and same has been admitted by the witness to be correct.

G.SARAVANAKUMAR
Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.04.29 12:21:29 +0530

**PRINCIPAL DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, GUDALUR.**